(ஏ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 7.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு சட்ட முன்வடிவின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரை ஆற்ற வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேக்சி கேப்ஸ் என்று சொல்லப்படுகிற வேன்கள் இன்றையதினம் கிராமங்களில், சிறிய நகரங்களில், படித்த வேலைவாய்ப்பில்லாத பட்டதாரிகள் அனேகம் பேர்களால் ஓட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பெரிய பஸ்கள் ஓடாத இடங்களில், அதிலும் நடுத்தர வர்க்கத்துக் குடும்பங்களைச் சேர்ந்த திருமணங்கள் போன்ற விசேடங்களுக்கு இந்த மேக்சி கேப்-களைத்தான் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பயன் அடைகின்றார்கள். அதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரி ரூ. 1,500 என்பது உண்மையிலேயே தாங்க முடியாத வரிச்சுமையாகும். இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் மேக்சி கேப் வேன்களை ஓட்டிக்

---

*30-9-1991ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1991 அக்டோபர் 3]

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கொண்டிருக்கிற டிரைவர்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக இன்றையதினம் உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியான ஈரோட்டிலிருந்து எனக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள். எங்கள் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகி இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறோம், இருந்தாலும் அவர்கள் கேட்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள், நீங்கள் சொல்லக் கூடிய இடத்தில் இருக்கிறீர்கள், சொல்ல வேண்டிய இடத்தில் அவர்கள் இல்லை, ஆகவேதான் உங்களுக்குத் தந்தி அடிக்கிறோம் என்று சொல்லி, எனக்குத் தந்தியடித்து சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள், மிக வறியவர்கள் வங்கியில் கடன் வாங்கி மிகுந்த வட்டிச் சுமையோடு நடத்திக் கொண்டிருக்கிற தொழிலுக்கு இவ்வளவு பெரிய வரி போட்டிருக்கத் தேவையில்லை, அந்த வரியைத் தாங்கள் தயவுசெய்து குறைத்து அந்த ஏழை எளிய மக்களின் பெரிய சுமையினை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மேக்சி கேப்-களின் வரி 1,500 ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றாலும் நாம் மற்ற மாநிலங்களையும் பார்க்கவேண்டும். இதற்கு கர்நாடக மாநிலத்தில் ரூ. 2,000 மும், கேரளாவில் ரூ. ரூ. 2,324-ம், அதேபோல் பம்பாயில் ரூ. 5,610 என்ற அளவிலும் வரி போடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே உழல்கின்ற மக்களுடைய துயரங்களைத் துடைக்கவேண்டுமென்ற அரசின் தலையாய கொள்கையின் காரணமாக, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் உறுதி தந்ததைப்போல 50 சி.சி. இரண்டு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோருக்கு முழு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்திய நாட்டின் வரலாற்றிலேயே எந்தவொரு மாநிலத்திலும் செய்யாத ஒரு சாதனையை செய்து அந்த வரிவிலக்கின் மூலம் இன்றையதினம் 4.5 இலட்சம் குடும்பங்கள் அந்த வாகனத்தைப் பயன்படுத்து

பவர்கள் இப்போது பயன்பெற்றிருக்கிறார்கள். அதன் மூலம் அரசுக்கு ஏறத்தாழ 7.45 கோடி வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது இந்தியநாட்டின் இமாலய சாதனை என்று புரட்சித் தலைவி அவர்களை பாராட்டுகிறார்கள். இதனால் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பயன்பெறுகிறார்கள். ஆகவே ஏழை மக்கள், அடித்தளத்தில் உழைத்துக்கொண்டிருப்பவர்கள், பள்ளிக்குச் செல்கின்றவர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கிராமப்புறங்களில், நகரப் புறங்களில் உள்ள பெரும்பாலானவர்கள் இந்த 50 சி.சி. இருசக்கர வாகனத்தைப் பயன்படுத்துகிற காரணத்தால் இதற்கு வரிவிலக்கு அளித்ததன் காரணமாக, அதற்கு மேல் சி.சி. உள்ள ஊர்திகளுக்கு இன்றைக்கு சிறிது வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு பல்வேறு சலுகைகளை செய்கிறபோது வசதி பெற்றவர்களிடமிருந்துதான் வரியைப் பெற்றாக வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே வசதி படைத்தவர்கள் என்றில்லாவிட்டாலும் கூட, மேக்சி கேப் போன்ற வாகனங்களைப் பயன்படுத்துகிறவர்களிடமிருந்து உரிமையாளர்கள் அதற்கேற்றவாறு கட்டணத்தை உயர்த்தி வசூல் செய்கிறார்கள்.

பிற்பகல் 7-25

ஆகவே வேறு மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மிகவும் பெரிதல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இந்த சட்டமுன் வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்", என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "1991ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1991). மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்மோரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

*1-10-1991ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS